அருள் தரும் இமயம்

thirukkalyanamatha.com

# திருக்கல்யாணத்தாய்



## ஜெபமாலையே ஜெயம்!

மலர் : 3 இதழ் : 10 அக்டோபர்–2012
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு பபியான் ஜோசப்

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. லீமா ரோஸ்
திருத்தொண்டர்.பபிஸ்டன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
பங்குத் தந்தை
திருக்கல்யாண மாதா ஆலயம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| அறிவோம் அன்னையை | 6 |
| ஜெபமாலை நம் அன்னைக்கு... | 13 |
| இதய நோய் | 19 |
| புனித ஜெபமாலை அன்னை | 23 |
| ரோஜா மலர் குழந்தை திரேஸ் | 24 |
| அன்னையின் அணிகலன்கள் | 27 |
| வேதமே வெளிச்சம் | 28 |
| மாவட்ட அளவில் சாதனை | 30 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 32 |

வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்!    இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத்தாய் மாத இதழின் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைக் கூறி ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இனிய நேயர்களே! இந்த மாத இதழ் **ஜெபமாலை** சிறப்பிதழாக வெளிவருகிறது. இறைவன் விவிலியம் வழியாக நம்மோடு பேசுகிறார். நாம் ஜெபத்தின் வழியாக தந்தையாம் இறைவனோடு பேசுகிறோம். இறைவனோடு எப்படிப் பேசவேண்டும் என்பதை ஜெபமாலை வழியாக இறை அன்னை நமக்குக் கற்றுத் தருகிறார். ஜெபமாலை பக்தியில் வளர, நமது பிள்ளைகளுக்கு சொல்லித் தந்து வளர்க்க வேண்டியது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும். இறை அன்பும், மனித நேயமும் உடைய சமுதாயத்தை உருவாக்க ஜெபமாலை பக்தியே தகுந்த வழியாகும். அன்னைமரி தன் மைந்தனை ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் நலமாக, வளர்த்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ வழிகாட்டினார்கள். (லூக்.2:52) அதுபோல நாமும் நமது பிள்ளைகளை உருவாக்க ஜெபமாலை வழியாக ஜெபிப்போம்.

திருக்கல்யாண அன்னை நம் வேண்டுதல்களை தம் மகன் வழியாக நமக்கு அருள் செய்வாராக. வாழ்வில் வளமும் மனதில் மகிழ்ச்சியும் பெற்று வாழ்வாங்கு வாழ திருத்தலம் தேடி வருவோம். அன்னையின் புகழை அகிலமெங்கும் பரப்புவோம்.

நம் திருக்கல்யாண அன்னையின் ஆசி அனைவருக்கும் உரித்தாகுக!

இயேசுவுக்கே புகழ்!    இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

## திருத்தந்தையின் திருமடல்

இந்த மாதம் (அக்டோபர்) தொடங்கவிருக்கும் விசுவாச ஆண்டில் புதிய திரு மடல் ஒன்றை திருத்தந்தை வெளியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே 2005, 2007,2009ம் வருடங்களில் முறையே **Deus caritas est, Spesaivi, Caritians in veritate** ஆகிய திருமடல்களை திருத்தந்தையவர்கள் வெளியிட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது காஸ்தெல் கந்தோல்போவிலுள்ள பாப்பிறைகளின் கோடை விடுமுறை இல்லத்தில் ஓய்வெடுத்து வரும் திருத்தந்தை, நாசரேத்தூர் இயேசு என்ற தனது நூலின் மூன்றாம் பாகத்தை எழுதிமுடித்துள்ளார். இந்நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கக்கூடும் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

## திருத்தந்தையின் வாழ்த்துச் செய்தி




மத்திய ஆப்ரிக்காவில் அமைந்துள்ள காபோன் என்ற நாடு 1961ம் ஆண்டு பிரஞ்சு ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்று ஒரு குடியரசானது. ஏறத்தாழ பதினாறு இலட்சம் மக்கள் வாழும் இந்த நாட்டில் கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் பழங்குடியின மக்களின் மதங்களைச் சார்ந்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். தனது 52வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் காபோன் குடியரசின் தலைவர் அலி போன்கோவுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மக்கள் துணிவுடனும், ஆர்வத்துடனும் உழைப்பதை நான் பாராட்டுகிறேன் என்று திருத்தந்தையவர்கள் கூறினார்கள்.

## இறைமகனை சந்திக்க....

தனக்கு இவ்வுலகம் தரவிழைந்த பதவிகளை விட்டு விலகியதோடு நின்று விடாமல் தன் சீடர்களையும் புகழைத் தேடாத ஒரு வாழ்வைத் தேர்ந்துகொள்ளுமாறு இயேசு அழைத்தார் என்று கூறிய திருத்தந்தை மக்களின் புகழை மட்டும் இயேசு தேடுபவராக இருந்திருந்தால் அவர்கள் ஏற்பதற்கு கடினமான உண்மைகளைச் சொல்லாமல் இருந்திருப்பார். ஆனால் தான் எருசலேமில் படவிருக்கும் துன்பங்களை விளக்கும் கசப்பான உண்மைகளாய் இயேசுவின் வார்த்தைகள் ஒலித்தன என்றார். மேலும், நற்கருணை என்ற அருள்சாதனத்தில் தாழ்ச்சியின் சிகரமாய் விளங்கும் இறைமகனைச் சந்திக்க நாம் தயாராக வேண்டும் என்றும் திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்கள். –நன்றி : **நம்வாழ்வு**

# மறை மாவட்ட செய்திகள்





- 06.09.12 அன்று குறுக்குச் சாலை மறைவட்டத்தில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான தியானத்தில் மேதகு ஆயர் அவர்கள் குருக்களை சந்தித்து உரையாடினார்கள்.
- 07.09.2012 பெரியசாமிபுரத்தில் மேதகு ஆயர் அவர்களால் திடப்படுத்துதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. அன்று மாலை மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் அணைக்கரை திருவிழா மாலை ஆராதனை நடைபெற்றது.
- 08.09.2012 அணைக்கரை புனித பிரகாசியம்மாள் ஆலய திருவிழா திருப்பலி மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.
- 10.09.2012 தூத்துக்குடி மறைமாவட்டத்தில் நடைபெற்ற குருக்களுக்கான தியானத்தில் மேதகு ஆயர் அவர்கள் குருக்களை சந்தித்து உரையாடினார்கள்.
- 11.09.2012 அன்று அடைக்கலாபுரத்தில் வைத்து நடைபெற்ற மணப்பாடு மறைவட்ட குருக்களுக்கான தியானத்தில் மேதகு ஆயர் அவர்கள் குருக்களை சந்தித்து உரையாடினார்கள்.
- 12.09.2012 அன்று மாலை மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் புனித லூசியா நிறுவன நிர்வாகக் கூட்டம் மீளவட்டானில் வைத்து நடைபெற்றது.
- 13.09.2012 அன்று காலை மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும், அன்று மாலை மணப்பாடு திருச்சிலுவை ஆலய திருவிழா மாலை ஆராதனையும் நடைபெற்றது.
- 14.09.2012 அன்று காலை மணப்பாடு புனித திருச்சிலுவை ஆலய திருவிழாத் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 16.09.2012 அன்று காலை தூத்துக்குடி, காந்திநகர், புனித தாமஸ் ஆலயத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திடப்படுத்துதல் திருப்பலியும் அன்று மாலை கிழவநேரி பங்கிலிருந்து புதிதாக பிரிக்கப்பட்டுள்ள ஆனைக்குளம் புதிய பங்கு ஆரம்பத் திருப்பலியும் நடைபெற்றன.
- 17.09.2012 அன்று சாத்தான்குளம் மறைவட்ட குருக்களுக்கான தியானத்தில் மேதகு ஆயர் அவர்கள் குருக்களை சந்தித்து உரையாடினார்கள்.
- 18.09.2012 அன்று வடக்கன்குளம் மறைவட்ட குருக்களுக்கான தியானத்தில் மேதகு ஆயர் அவர்கள் குருக்களை சந்தித்து உரையாடினார்கள்
- 20.09.2012 அன்று காலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும், அன்று மாலை அடைக்கலாபுரம் கருணை இல்ல நிர்வாகக் குழு கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 29.09.2012 அன்று தருவைக்குளத்தில் திடப்படுத்துதல் திருப்பலியும் 30.09.2012 அன்று செட்டிவிளையில் திடப்படுத்துதல் திருப்பலியும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்

- 01.09.12 அன்று முதற்சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன.
- 09.09.12 விவிலிய மாதத்தை முன்னிட்டு திருப்பலி நிறைவு பெற்றவுடன் இளையோர் மறைக்கல்வி மன்றத்தினருக்கு நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து விவிலிய வினாடி வினா போட்டி நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஞாயிறு மறைக்கல்வி மாணவர்களுக்கு பாடல் போட்டி நடைபெற்றது. மதியம் புனித தோன்போஸ்கோ சபை இளைஞர்கள்,மாதா சபை இளம் பெண்கள் ஆலயத்தை சுத்தப்படுத்தினார்கள்.
- 16.09.12 அன்று மரியாயின் சேனையாளர்கள் தங்களுடைய விழாவினை சிறப்பித்தார்கள்.
- 16.09.12 விவிலிய மாதத்தை முன்னிட்டு காலை 9.30மணிக்கு ஞாயிறு மறைக்கல்வி 1 முதல் 9ம் வகுப்புவரை உள்ள மாணவ மாணவியர்களுக்கு இறைவார்த்தை ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 10முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியர்களுக்கு விவிலிய கதை கூறும் போட்டி நடைபெற்றன.அதன்பின் 11மணி முதல் 12.30 வரை எசாயா, எரேமியா எசேக்கியேல் நூல்களிலிருந்து பங்குமக்கள் அனைத்து நிலையின ருக்கும் விவிலிய வினாடி வினா நடைபெற்றது. மாலை 3.00 மணிக்கு மத்தேயு நற்செய்திப் பகுதியிலிருந்து பெற்றோர் மறைக்கல்வி மன்றத்தினருக்கு ‘விவிலிய வினாடி- வினா? போட்டி நடைபெற்றது. அன்று மாலை 7.00 மணிக்கு கூடன்குளம் பிரச்சனையால் துன்பப்படும் மக்களுக்காக சிறப்பு திருமணி ஆராதனையும் அதைத் தொடர்ந்து நற்கருணை ஆசீரும் நடைபெற்றது.
- 21.09.12அன்று கிளைப்பங்கு நவமுதலூர் ஊர்த்திருவிழா பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
- 23.09.12 அன்று விவிலிய ஞாயிறு பங்கு அளவில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஞாயிறு மறைக்கல்வி மன்றத்தினர் இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்கள். அன்று காலை 10 மணிக்கு வீடுகளில் விவிலிய அரங்கேற்ற அலங்காரப் போட்டி நடைபெற்றது. மாலை 3 மணிக்கு மேல்நிலைப் பள்ளி அரங்கில் வைத்து விவிலிய கண்காட்சி நடைபெற்றது. மாலை ஆராதனை முடிந்தவுடன் அன்பியங்களுக்கிடையே நடனப் போட்டி நடைபெற்றது. அதன்பின் பங்குத் தந்தை, திருத்தொண்டர் மற்றும் அருட்சகோதரிகள் தலைமையில் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விவிலிய மாதத்தை முன்னிட்டு திருவிவிலியம் சலுகை விலையில் வழங்கப்பட்டது.
- திருக்கல்யாண அன்னை திருவிழா முன்னேற்பாடாக கோவில் மற்றும் தேர் ஜோடனைக்கும், ஒலி-ஒளி அமைப்பிற்கும், மேளதாளத்திற்கும் ‘கொட்டேஷன்’ கொடுக்க ஆர்வமுள்ள வர்கள் பங்குத்தந்தையிடம் கொடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.
- 24.09.12 அன்று புனித மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளி, புனித வளனார் பெண்கள் துவக்கப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளும் இணைந்து

விவிலிய மாதத்தை சிறப்பாக கொண்டாடினார்கள். பங்குத் தந்தை தலைமையில் திருத்தொண்டர், அருட்சகோதரிகள், தலைமையாசிரியைகள், ஆசிரியப் பெருமக்கள், மாணவ-மாணவியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தார்கள். இவ்விழாவில் மாணவ மாணவியர் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

- 30.09.2012 அன்று கிளைப் பங்கு நவமுதலூர் திருவிழா ஆடம்பரத் திருபபலி, பங்குத் தந்தை தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**- பங்குத்தந்தை**



# பங்கு நிர்வாகக்குழு கூட்டம்

2.09.12 அன்று காலை 11மணிக்கு பங்குத் தந்தை தலைமையில் பங்கு நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட் ட முடிவுகள்.

1.கோவில் வீடானது கோவில் பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் வாடகைக்கு கொடுக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது.

2. முதல் கோவிலாகிய பழைய சப்பரப்பரை இருந்த இடத்தில் ஆழ்குழாய் போட்டு தண்ணீர் எடுத்து புதுமை நீராக மக்களுக்குக் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

3. முதல் சனியன்று வரிகாரர்கள் கடைவைத்தால் குலுக்கல் முறையில் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கடை வைக்கும் இடம் தேர்ந்து எடுக்கப்படும். கடை வைக்க விரும்பும் வரிகாரர்கள் வெள்ளி மதியம் 12 மணிக்குள் பொறுப்பாளர்களிடம் பெயர் கொடுத்து குலுக்கலுக்கு கட்டாயம் வரவேண்டும் இல்லையேல் அவர்களுக்கு கடை வழங்கப்படமாட்டாது.

4. மாத இதழில் பாத்திர வாடகை வரவு – செலவு வெளியிட முடிவு செய்யப்பட்டது.

5. கோவிலில் 6 கேமராக்கள் அமைத்து உண்டியல், பீடம் மற்றும் முக்கிய இடங்களைக் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஆகும் முழு பணச் செலவையும் திரு. சந்தணத்திரவியம் அவர்கள் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தார்கள்.

6. கிறிஸ்து பிறப்பு குடில் சிறப்பாக செய்ய முடிவெடுக்கப்பட்டது. இதை பங்குத் தந்தையோடு கலந்து செய்ய திரு. காமராஜ் அவர்கள் ஒப்புதல் கொடுத்தார்கள்.

7. திரு. காமராஜ் அவர்கள் இரும்பு பெஞ்ச், இரும்பு மறிப்புகள் மற்றும் முதல்சனியன்று மக்கள் உணவருந்த ஸ்டீல் தட்டுக்கள் செய்து தர ஒப்புதல் கொடுத்தார்கள்.

8.திருவிழா தேர் ஜோடனைக்கு ஆட்களை தேடும் பொறுப்பை திரு. சூசை செசன்ராஜ், திரு . இருதயராஜ் ஆகிய இருவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

**- பங்குத்தந்தை**

# அறிவோம் அன்னையை!



மாதாவின் பிரார்த்தனை லொரெத்தா பிரார்த்தனை என்று அழைக்கப்படுகிறது. இதில் 49 வாழ்த்துக்கள் அடங்கியிருக்கிறது.

2ம் வத்திக்கான் சங்கத்தில் நம் மரியன்னைக்கு 1. பரிந்துரைப்பவர் 2. உபகாரி 3. உதவியாளர், 4. மத்தியஸ்தி என நான்கு பட்டங்கள் வழங்கப்பட்டு வந்தது.

பாத்திமா (போர்ச்சுக்கல்)வில் அன்னை, லூசியா, பாத்திமா, பிரான்சிஸ் ஆகியோருக்கு 1917ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் முதல் அக்டோபர் 13ம் நாள் வரை 18முறை காட்சியளித்தார்.

பாத்திமாவில் அன்னை மரியாள் ஜெபமாலை சொல்லுங்கள், பாவங்களுக்காக பரிகாரம் செய்யுங்கள், உங்களை முழுவதும் என்னிடம் ஒப்படையுங்கள் என்று கூறினார்கள்.

அன்னை மரியாள், புனித லூசியிடம் நான் ஜெபமாலை அன்னை என்று கூறியுள்ளார்.

உத்திரியம் மரியாளின் கல்லீரல் என்று அழைக்கப்படுகிறது.

பச்சை உத்திரியம் திரு இருதய அன்னையை எடுத்துக் கூறும் அடையாளச் சின்னம் ஆகும்.

புனித ஜஸ்டின் என்பவர் தான் பச்சை உத்திரியத்தின் பக்தி மகிமையை பரப்பியவர் ஆவார்.

கிறிஸ்தவர்களின் சகாய அன்னை ஆசீரை எழுதியவர் புனித தொன் போஸ்கோ ஆவார்.

பேராயர் புனித அம்புரோஸ், மரியாள் கடவுளின் தாய். திருச்சபைக்கு ஓர் முக்கியமான எடுத்துக்காட்டு என்று கூறினார்.

– **ஜெ. ஜெனி,** பொற்பை

## நீங்கள் யார்...?

| | |
|---|---|
| முதல் முயற்சியில் வெற்றி பெறுபவன் | – **அதிர்ஷ்டசாலி** |
| இரண்டாம் முயற்சியில் வெற்றி பெறுபவன் | – **புத்திசாலி** |
| மூன்றாம் முயற்சியில் வெற்றி பெறுபவன் | – **தைரியசாலி** |
| நான்காம் முயற்சியில் வெற்றி பெறுபவன் | – **அனுபவசாலி** |
| வெற்றிபெறும் வரை முயற்சி செய்பவன் | – **சாதனையாளன்** |

இதில் நீங்கள் யார்...?

– **டே. கீர்த்திகா,** வெள்ளக்கோயில்

# கவிதைச் சோலை

## அழகு

நீருக்கு மீன்கள் அழகு!
வானத்தில்–
நட்சத்திரங்கள் அழகு!!
சிப்பிக்குள் முத்து அழகு!
மழைத்துளி போல்
முத்துமுத்தாய்
வரும் மாந்தருக்கு
திருக்கல்யாணத்தாயின்
அருள்
அழகோ அழகு!!

**–தே. ஸ்மைலின்,**
வெள்ளக்கோயில்

## திருக்கல்யாண மாதாவே...

திருக்கல்யாண மாதாவை எந்நாளும்
வாழ்த்தி வணங்கிடுவோம் – எந்நாளும்
போற்றி புகழ்ந்திடுவோம்
பொற்பை நகர் வாழும் புன்னகை தாயே
என்றும் எமைக் காப்பாயே
அருள் நிறை மரியே ஆண்டவர் தாயே
அனைவரும் வாழ்ந்திட அருள் புரிவாய்
நாங்கள்–
அனைவரும் வாழ்ந்திட அருள் புரிவாய்
தேரில் பவனி வரும் தென்னகத்தென்றல்
தேடும் எம்மைக் காப்பாயே
தேனிசை கேட்டு பொங்கிடும் தாயே
அவனியில் அனைவரும் மகிழ்ந்திடவே
இந்த–
அவனியில் அனைவரும் மகிழ்ந்திடவே

**–D. ஜோஸ்பின் மேரி தாசன்,**
கவரப்பேட்டை

## ஆலயம்... அறிவாலயம்...

அமைதிக்கு ஓர் ஆலயம்
அறிவுக்கு ஓர் அறிவாலயம்
புனிதர் வாழ்வது ஆலயம்
புனிதர்களை உருவாக்கும்
இடம் அறிவாலயம்
இறைவன் உள்ள இடம் ஆலயம்
கல்வி கற்கும் இடம் அறிவாலயம்
தேவன் தங்குமிடம் ஆலயம்
தேவையான கல்வி தரும் அறிவாலயம்
இறை அன்பு உள்ள இடம் ஆலயம்
நிறை கல்வி தரும் இடம் அறிவாலயம்

**–தே. சுகிர்தமணி அன்பரசன்,**
கவரப்பேட்டை

## தாயின் கருணை

வாயில் இல்லாமல் வீடு இல்லை
உயிர் இல்லாமல் உடல் இல்லை
புத்தகம் இல்லாமல்
படிப்பு இல்லை
நீர் இல்லாமல்
மீன்கள் இல்லை
அறிவு இல்லாமல்
ஆற்றல் இல்லை
திருக்கல்யாணத் தாயின்
கருணை இல்லாமல்
நம் வாழ்வே இல்லை

**–டே. நிஜிதா,**
வெள்ளக்கோயில்

## உம் பதம் நாடி...

மாதா திருக்கல்யாண மாதா
உம்முடைய அற்புதங்கள்
பலகோடி
எண்ணில்லா வரங்கள் புரியும்
உம்மைத் தேடி தேடி
அலைகடலென ஓடிவந்தோம்
உம் பதம் நாடி... நாடி...

**–தே. அந்தோனி மெர்சி,**
பொற்பை




# நன்றிகள் பலகோடிகள்
# 01.09.2012 முதல்சனி
# உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| பெயர் சொல்ல விரும்பாத பொற்பை நபர் | 501.00 |
| திரு. சிலுவை அந்தோனி கனி (பொற்பை) | 501.00 |
| பெயர் சொல்ல விரும்பாத கோவை நபர் | 1000.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| ஷிஜி பிளாசிட், மரியநாடு | 430.00 |
| லாரன்ஸ், தஞ்சாவூர் | 500.00 |
| அந்தோணி ராஜ், பொற்பை | 500.00 |
| சகாய சுபின், இணையம் | 102.00 |
| அந்தோனி அசோக், ஆரோக்கியபுரம் | 101.00 |
| அந்தோனி பிலவேந்திரன், பொற்பை | 500.00 |
| மோசஸ் ரீனா, பூவார் | 500.00 |
| ஆண்டனி ஷோபா, பொழியூர் | 430.00 |
| வில்சன் அற்புதமாதா பிளைவுட் | 100.00 |
| ராஜமங்களம், ஹெலன் நகர் | 200.00 |
| கௌசல், கீழமணக்குடி | 2000.00 |
| மெற்றில்டா இருதய தாசன், குளச்சல் | 500.00 |
| செல்வராஜ், ஈரோடு | 500.00 |
| இறைமக்கள், ராஜாவூர் | 2000.00 |
| மரியம்மாள், மழுங்கூர் | 500.00 |
| கிறிஸ்துராஜன் கவிதா, வள்ளூர்துறை | 1000.00 |
| ஜோசப், சென்னை | 100.00 |
| வின்செண்ட், பொற்பை | 500.00 |
| பெயர் சொல்ல விரும்பாத பூந்துறை நபர் | 500.00 |
| பொ்னத்தம்மாள், கொட்டில்பாடு | 110.00 |
| செல்வராஜ், சாத்தான்குளம் | 2000.00 |
| அனிஸ் மெஸ், பொள்ளாச்சி | 150.00 |
| டேவிட் ஸ்டெல்லா, இறைமன்துறை | 3000.00 |
| பதுவா டிராவல்ஸ், மணப்பாடு | 600.00 |
| சுரேஷ், பொற்பை | 300.00 |
| வில்சன் ஜெபமணி, பாளை | 1000.00 |
| சுரேஷ், பொற்பை | 100.00 |
| ஜீவன் எபிஸ்டர், அமலிநகர் | 1000.00 |
| பெயர் சொல்ல விரும்பாத பொற்பை நபர் | 1001.00 |
| ரமேஷ் மோகன் குடும்பத்தார், தூத்துக்குடி | 30000.00 |
| அந்தோனி செல்வம் ரஜீலா, சாத்தான்குளம் | 1000.00 |
| சைமன், மரிய வென்ஸி, பூவார் | 500.00 |

| | |
|---|---|
| அல்போன்ஸ் மேத்தா, தூத்துக்குடி | 100.00 |
| ஜெரி டிலைட்டா, மணப்பாடு | 5000.00 |
| ரூபன் அருள்சுஜி, இணையம் | 500.00 |
| ஜெபமாலை எக்ரெல், வீரபாண்டியன்பட்டணம் | 500.00 |
| சைமன்ஜெகதீஷ், திருநெல்வேலி | 1000.00 |
| மாலதி, கூடுதாழை | 1000.00 |
| மரிய செல்வம், உடன்குடி | 500.00 |
| விஜி, உவரி | 100.00 |
| ராஜா, உவரி | 100.00 |
| லாசர் வில்லவராயர், தூத்துக்குடி | 500.00 |
| சார்லஸ், மேலப்பாளையம் | 200.00 |
| மெர்சி, நாகர்கோவில் | 100.00 |
| கென்னடி, தூத்துக்குடி | 100.00 |
| பிரதீப், முக்காணி | 100.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. எட்வின் காமராஜ் டெய்சிராணி குடும்பத்தினர் | 5000 சாப்பாடு பிளேட், பூ ஜாடிகள் |
| திரு. சிலுவை குடும்த்தார், பொற்பை | 5 வாழைத்தார் |
| திரு. ஜேசுதுரை, பொற்பை | 13 தேங்காய் |
| திரு. ஜஸ்டின், பொற்பை | 2 வாழைத்தார் |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | 85 தேங்காய் |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | 300 கிலோ அரிசி |
| திரு. ராஜேஷ் அமலா, பொற்பை | 50 கிலோ அரிசி |
| திரு. ஞானம், மலேசியா | 50 கிலோ அரிசி |
| திரு. சைமன் ஜெகதீஷ், மூகாம்பிகை | 50 கிலோ அரிசி |
| திருமதி. எஸ்தர், ராஜாவூர் | 125 கிலோ அரிசி 7தேங்காய் |
| திரு. சகாயராஜ் பிரேமி, முட்டம் | 25 தேங்காய் |
| திரு. அன்னையின் அடிமை, பொற்பை | பீடப் பூக்கள் |
| திருமதி. மலர், பெங்களூரு | பீடப் பூக்கள் |
| திரு. ஜோசப் செல்வராஜ், ஈரோடு | 325கிலோ அரிசி |
| திரு. பரணி, கோயம்பேடு மார்க்கெட் | 50 கிலோ சி.வெங்காயம் |
| திரு. செல்வகுமார், கோயம்பேடு மார்க்கெட் | 63 கிலோ ப.மிளகாய் |
| திரு. இசை ஈஸ்வரன், கோயம்பேடு மார்க்கெட் | 120 கிலோ தக்காளி |
| நீலகிரி டிரேடர்ஸ், கோயம்பேடு மார்க்கெட் | 52 கிலோ வெங்காயம் |
| திரு. ரவிஸ்டர், பொற்பை | 1 மூடை வெங், 1 மூடைஉருளை |
| எஸ்.பி. ஐ. கோயம்பேடு மார்க்கெட் | 1 மூடை உருளை |
| திரு. ஜெயச்சந்திரன், கோயம்பேடு மார்க்கெட் | 40 கிலோ புடலங்காய்<br>60 கிலோ சேனை<br>40 கிலோ மஞ்சள் பூசணி |
| திரு. சுரேஷ், கோயம்பேடு மார்க்கெட் | 20 கிலோ பீன்ஸ் |
| திரு. துரை, கோயம்பேடு மார்க்கெட் | 10 கிலோ மாங்காய் |
| திருமதி. பெர்னத்தம்மாள், கொட்டில்பாடு | 25 கிலோ அரிசி |
| திரு. ஸ்டீபன், ஹெலன்நகர் | 100 கிலோ அரிசி |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (01.08.2012)

| | |
|---|---|
| சமையல் யோவான் | 11000.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| பாஸ்கர் மளிகை பில் | 51717.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் பாக்கெட் 88 மூடை | 4400.00 |
| சுப்பையா துப்புரவுப் பணி | 1000.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் அரிசி | 17050.00 |
| சென்னை காய்கறி பஸ் செலவு | 700.00 |
| முதற்சனி சமையல் ஆட்கள் சாப்பாடு | 805.00 |
| இம்மான் வண்டி வாடகை 14 நடை | 1800.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை 6 நடை | 1200.00 |
| அந்தோனிராஜ் விறகு 30 எடை | 4050.00 |
| 3 பணியாளர்கள் சம்பளம் | 470.00 |
| மொத்தம் | 94792.00 |

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 105140.00 |
| நன்கொடை மூலம் வரவு | 64526.00 |
| மீதமுள்ள முதற்சனி அசனபொருட்கள் ஏல வரவு | 15109.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 3000.00 |
| வட்டி மூலம் வரவு | 2114.00 |
| இதர வரவு | 7.00 |
| மொத்தம் | 189896.00 |
| செலவுகள் | 94792.00 |
| இறுதி இருப்பு (வங்கியில்) | 95104.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.07.12 அன்று இருப்பு | 23595.00 |
| 01.08.12 முதல் 31.08.12 வரை விற்பனை | 102229.00 |
| மொத்தம் | 125824.00 |
| 01.08.12 முதல் 31.08.12 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 64810.00 |
| 31.08.12 அன்று இருப்பு | 61014.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. நிரந்தர வேலையும், நல்ல மணமகளும் கிடைத்தமைக்கு நன்றி.
–**எட்வின்,** கர்நாடகா

2. திருமண வரம் கிடைத்தமைக்கும் நல்ல வேலை கிடைத்தமைக்கும் அன்னைக்கு நன்றி! – **சகாயராணி,** புதூர்

3. வேலை கிடைத்ததற்கும், தேர்வில் வெற்றியும், கடன் தொல்லை தீர்ந்தமைக்கும் நன்றி – **ஆரோக்கிய ராஜன்,** பொற்பை

4. அலகைத் தொல்லை அகன்றதற்கும், நல்ல இல்லம் அமைந்ததற்கும் நன்றி – **ஆரோக்கியம்,** மணப்பாடு.

5. கடன் தொல்லை தீர்ந்ததற்கு நன்றி.
– **சிலுவைப்பிள்ளை,** கொட்டில்பாடு

6. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி.
–**ஆரோக்கிய ரமிலா, ஜெனி,** கோடிமுனை

7. குழந்தைபாக்கியம் கிடைத்ததற்கு நன்றி
– **மாரியசூமன்,** சவேரியார்புரம்.

8. சவுதியில் வேலை கிடைத்தமைக்கு நன்றி – மைக்கிள், சென்னை.

9. தேர்வில் வெற்றிபெற்றமைக்கும், நல்ல வீடு கிடைத்ததற்கும் நன்றி. –**எம். ஜெனோலின்,** முதலூர்

10. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி
– **எஸ். செல்வி திரவியம்,** ஆலந்தலை.

11. நற்சுகம் பெற்றமைக்கும், குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கும், குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டமைக்கும் அன்னைக்கு நன்றி.
– **சரண்யா,** களியக்காவிளை

12. திருமணவரம் கிடைத்தமைக்கும், குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கும் நன்றி. – **ஜூலின்கீபா பெரின்,** மணக்குடி.

13. தேவ அழைத்தல் கிடைத்ததற்கும், தேர்வில் வெற்றி பெற்றதற்கும் நன்றி, – **பெனிஷ்,** மணக்குடி

14. உறவினர் நன்மைக்காக நன்றி. – **சகாய நித்திலா,** குளச்சல்

15. வழக்கில் வெற்றி பெற்றமைக்கு நன்றி. –**டி.மலையப்பன்**, அழகை

**– பங்குத்தந்தை**

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**07-07-2012 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1464பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1180 பேர் |
| சுகப்பிரசவம் | - | 1135 பேர் |
| நற்சுகம்பெற | - | 1690 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 1400 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1040 பேர் |
| வேலைகிடைக்க | - | 1402 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 2040 பேர் |
| குடும்பசமாதானம் | - | 2170 பேர் |
| குடும்பநலன் | - | 1680 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1620 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1275 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1206 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1302 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 805 பேர் |
| மனமாற்றமடைய | - | 1107 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1350 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1059 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1295 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2017 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 700 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## செயற்கை கண்டுபிடிப்பாளர்கள்...

| | | |
|---|---|---|
| செயற்கை மழை | – | **இர்வின் லாங்மோர்** |
| செயற்கை இரத்தம் | – | **டாக்விட்ச்** |
| செயற்கை இதயம் | – | **வில்லியம் கால்ப்** |
| செயற்கை கால் | – | **அம்ப்ரோஸ்பேர்** |
| செயற்கை சிறுநீரகம் | – | **வில்லியம் கால்ப்** |
| செயற்கை நிறம் | – | **வில்லியம் பெர்கின்** |

– **S. ஜெகன்,** பொற்பை.

# ஜெபமாலை... நம் அன்னை தந்த ஜெபமாலை!



அக்டோபர் மாதம் ஜெபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். தனது அன்புக் கரங்களில் ஜெபமாலை ஏந்திய வண்ணம் பாத்திமா நகரில் அன்னை தந்த அற்புதக் காட்சி ஜெப வாழ்வில் ஜெபமாலையின் அருமையை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது.

தனது சொந்த பலத்தில் வாழ்வில் நிறைவை அடைய முயலும் மனிதனுக்கு ஏமாற்றமும் விரக்தியுமே மிஞ்சுகிறது. வரலாற்றில் நடந்த இரண்டு உலகப்போர்களும் இதைத்தான் நமக்கு நினைவு படுத்துகிறது. அப்படியென்றால் அதைத் தவிர்த்து, அமைதி வாழ்வுக்கு வழி என்ன? உலகவிதமான பற்றுதல்களை விட்டு விட்டு உள்ளத்தில் இறைவனுக்கு இடம் கொடுப்பதே சிறந்த வழி. இதற்கு அர்ப்பணிப்புடன் கூடிய இறை ஒன்றிப்பைத் தருவது தான் ஜெபமாகும்.

நம் அன்னையின் அன்பில் இணைய, தேவ ரகசியங்களை அறிக்கையிட்டு, ஆண்டவரின் தூதருடைய வார்த்தைகளில் நம் அன்னையை வாழ்த்தி ஜெபமாலை ஜெபிப்பதே உன்னத வழி.

ஆண்டவரின் உயிர்ப்புக்குப் பின் அப்போஸ்தலர்கள் அன்னை மரியாயின் தலைமையில் தான் ஒன்று கூடி ஜெபித்தார்கள். இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் அன்னையின் பெயரால் ஒன்று கூடவும், அருள் வரங்களைப் பெற்றுக் கொள்ளவும் நம் இதயங்களை ஒன்று சேர்க்கும் சக்தியாக ஜெபமாலை விளங்குகிறது.

அன்னையின் பிரசன்னம் நம்மிடையே வருவதற்கும், நம் வேண்டுதல்களை அன்னை தம் திருமகனிடம் எடுத்துக்கூறி ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தருவதற்கும் ஜெபமாலை வழி செய்கிறது. ஜெபமாலையை ஏந்துகிறவர்கள் தங்கள் இதயத்தில் அன்னையை ஏந்துகிறார்கள். அப்போது அன்னையின் தாழ்ச்சி, பொறுமை, போன்ற நற்குணங்கள் நம் இதயத்தை நிரப்புகிறது. தன்னை அன்பொழுக அம்மா என்றழைக்கின்ற பிள்ளைகளின் அருகே அன்னை வருவதால் அவர்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

எனவே அன்பும், நம்மீது அக்கறையும் கொண்ட அன்னையை இயேசுவின் சொற்படி அம்மா என்று ஜெபமாலை வழியாக அழைத்து, ஜெபித்து அவரது தாயன்பில் இணைந்து வாழ்வோம்.

–அருட்திரு. **சி.பீட்டர் பால்,** அழகை.

# வாசகர் உள்ளம்...



- உலகத் திருச்சபை செய்திகள் திருச்சபையைப் பற்றி அறிந்து கொள்ள பயனுள்ளதாக இருந்தது. – **ஜேஸ்மின்,** பூனா.
- மறைமாவட்டச் செய்திகள் நமது மறைமாவட்டத்தில் கடந்த மாத நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள உதவியாய் இருந்தது. – **ஆண்ட்ரூஸ்,** வேம்பார்.
- பங்குச் செய்திகள் என்னைப் போல் வெளியூரில் வேலைபார்க்கும் அனைவருக்கும் பங்கின் நிகழ்வுகளை தெரிந்து கொள்ள உதவுகிறது.
  – **ரவீந்திரன்,** சென்னை.
- மகாத்மாவின் அறிவுரை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எங்கள் சொல்படி கேட்காதவர்கள் இந்த மலரைப் படித்து சில நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ளவாவது செய்வார்களே, தொடர்ந்து இது போன்ற துணுக்குகளை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். –**ஷீபா,** நல்லூர்.
- மாவட்ட அளவில் வெற்றி கட்டுரையைப் படித்ததும் அந்தப் பள்ளியில் படித்த பழைய மலரும் நினைவுகளைப் பார்ப்பது போல் இருந்தது. வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்களுக்கு வாழ்த்துக்கள்.
  – **ஆல்வின்,** மதுரை.
- அதிதூதர்களின் வரலாறு புனிதர்களின் விசுவாச வாழ்வை எங்களுக்கு தெளிவுபடுத்தியது. நன்றி. –**ஜெயராஜ்,** வேம்பார்.
- சில வரி செய்திகள் பலதரப்பட்ட அறிவை வளர்ப்பதாக உள்ளது.
  – **சந்தியாகு,** ஒட்டன்சத்திரம்.
- வெஜிடபிள் பிரைட் ரைஸ் சமைத்துப் பார்த்ததில் மிகவும் அருமையாக இருந்தது. – **தங்கமேரி,** சாத்தான்குளம்.
- அன்னையின் அற்புதங்களும் சாட்சிகளும் அன்னையின் மகிமையை உலகிற்கு பறைசாற்றுவதாக இருந்தது.
  – **ப்ரீத்தி,** சென்னை.
- செபமாலை சிந்தனைகள் ஜெபமாலையின் பலத்தை அறியாதவர்களுக்கு உணர்த்துவதாக உள்ளது.
  –**மெர்லின் கிளாட்வின்,** மன்னார்புரம்.
- "அறிவோம் அன்னையை" செய்தி அன்னையைப் பற்றிய புதிய தகவல்களை அள்ளித் தருகிறது. – **பீனா,** கேரளா.
- குட்டீஸ் கார்னர் செய்திகள், போட்டித் தேர்வுகளுக்கு தயார் படுத்தும் விதமாக உள்ளது. – **வெனிஸ்,** கோவில்பட்டி

# முதல் சனி வழிபாடு (1.9.2012)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

செப்டம்பர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 01.09.2012 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**கென்னடி** C.Ss.R அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தி னார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **சத்தியநேசன்** அடிகளார், தலைமை யில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** பேரருட்திரு.**மரியதாஸ்,** அருட்திரு.**பங்கிராஸ்,** அருட்திரு. **கென்னடி,** அருட்திரு.**டொமினிக்,** அருட்திரு.**சகாயராஜ்,** திருத்தொண்டர் **பபிஸ்டன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**கென்னடி** C.Ss.R அடிகளார் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து 100 வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10,000** க்கு மேற்ப்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், மோர் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **கென்னடி** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு சிறப்பு நற்கருணை ஆசீரும் நடைபெற்றது.

**- பங்குத்தந்தை**

## ஆகஸ்ட் 2012– வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| நிரந்தர வைப்பு நிதியில் ரூ.390000.00<br>வங்கியில் ரூ. 99846.00<br>கையில் ரூ. 5681.00 | 495527.00 | |
| திருப்பலி 546X70 (முதற்சனி 486 அலுவலகம் 60) | 38220.00 | |
| நன்கொடை வரவு | 5000.00 | |
| ஞாயிறு காணிக்கை | 11579.00 | |
| திருமணம் | 1125.00 | |
| அடக்கம் | 1250.00 | |
| அசன மண்டப வாடகை | 2700.00 | |
| முதல் சனி கடைகள் | 2895.00 | |
| உபதேசியார் மூலம் வரவு | 13182.00 | |
| மே.நி.பள்ளி ஆசிரியர்கள் | 3966.00 | |
| தொடக்கப்பள்ளிகள் | 1366.00 | |
| பைப் திருப்பிகொடுத்த வகையில் | 6000.00 | |
| ரூம் வாடகை | 200.00 | |
| வங்கி வட்டி மூலம் வரவு | 15775.00 | |
| மொத்தம் | 598785.00 | |
| **செலவுகள்** | | |
| விண்ணப்ப படிவம் அச்சடிக்க | | 5000.00 |
| முதல்சனி அறிவிப்பிற்கு ஸ்பீக்கர், வயர் வாங்கியது | | 7770.00 |
| முதல் சனி தந்தையர் படி | | 5650.00 |
| முதல் சனி உணவு வழங்கிய வகைக்கு | | 55563.00 |
| கழிவுநீர் வெளியேற்ற பைப் அமைத்த வகைக்கு | | 94356.00 |
| முதல்சனி பள்ளியில் பாத்ரூம் லைட் கட்டிய வகையில் | | 200.00 |
| பைபிள், புக், சி.டி வாங்கியது | | 806.00 |
| பள்ளி காம்பவுண்ட் சுவர் வழக்கறிஞர் கட்டணம் | | 2000.00 |
| மின் கட்டணம் | | 18843.00 |
| தொலைபேசிக் கட்டணம் | | 1025.00 |
| ஆலய வீடு மின் இணைப்புக் கட்டணம் | | 1600.00 |
| எரிவாயு | | 430.00 |
| தோழன் சந்தா | | 105.00 |
| தொலைபேசி சரிசெய்ய | | 200.00 |
| மாதா சபை சுற்றுலா கூடுதல் செலவு | | 560.00 |
| கோவில் ஆம்ப்ளிபயர் சரி செய்ய | | 500.00 |
| உதவித் தொகை | | 2200.00 |

| | |
|---|---|
| டீசல் +ஆயில் –ஜெனரேட்டர், வாகனம் | 4988.00 |
| வண்டி சரி செய்ய செலவு | 18470.00 |
| பேட்டரி | 3800.00 |
| கோவில் முன் மணல் சரிசெய்ய கூலி | 350.00 |
| ஸ்டேனரி | 1920.00 |
| டோபி (பயணிகள் அறை+பங்கு இல்லம்) | 620.00 |
| மருந்துகள் | 659.00 |
| பயணச் செலவு | 480.00 |
| செக் போஸ்ட் | 310.00 |
| பழங்கள் | 730.00 |
| ரெஃப்ரஷ்மெண்ட் | 360.00 |
| மளிகை சாமான்கள் | 4203.00 |
| தண்ணீர், பால் | 1850.00 |
| செய்தித்தாள் | 113.00 |
| மீன், மட்டன், சிக்கன், காய்கறி | 2354.00 |
| ஆழ்குழாய் கிணறு வகையில் | 27600.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| துப்புரவுப் பணியாளர் ஊதியம் | 6000.00 |
| இரவுக் காவலர் ஊதியம் | 2000.00 |
| தொ.பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலிப் படி | 1500.00 |
| புனித வரி | 28552.00 |
| மொத்த செலவு | 319667.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ. 598785.00 |
| மொத்த செலவு | ரூ. 319667.00 |
| இறுதியிருப்பு | ரூ. 279118.00 |


| | |
|---|---|
| வங்கியில் | ரூ.273621.00 |
| கையில் | ரூ. 5497.00 |
| மொத்தம் | ரூ. 279118.00 |




# குட்டீஸ் கார்னர்

ஹாய் மைடியர் குட்டீஸ்,
பள்ளியில் காலாண்டுத் தேர்வுக்கான முடிவுகள் வந்திருக்கும். குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்கள் மனம்தளர வேண்டாம் இன்னும் முயற்சி செய்யுங்கள். தினமும் அன்னை மரியாளிடமும், இயேசப்பாவிடமும் ஜெபத்தின் வழியாக பேசுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கு போதுமான ஞானத்தை தருவார். சரி, இந்த மாதம் ஒரு ரிலாக்சுக்காக இரண்டு புதிர் விளையாட்டுக்கள் இருக்கின்றன. முயற்சி செய்யுங்கள்... உங்களாலும் முடியும் குட்டீஸ்! ஓகே.. பை.. பை.. சீ...யூ...

குட்டிப் பையன் டிங்குவுக்கு
அவன் நண்பர்கள் இருக்கும்
இடத்திற்கு சென்று
விளையாட விருப்பம்.
ஆனால் பாதை தெரியாமல்
விழித்துக்
கொண்டிருக்கிறான்.
எங்கே...
நீங்கள் தான் அவனை
அங்கே அழைத்துச்
செல்லுங்கள் பார்ப்போம்..!






இரண்டு
இரயில்களுக்கும்
இடையில்
குறைந்தபட்சம்

**7**

வித்தியாசங்கள்
உள்ளது.

**60** செகண்டுகளில்
கண்டுபிடியுங்கள்
பார்க்கலாம்...



விடைகள் : 23ம் பக்கம்





# இதய நோய்

## வருமுன் காப்போம்..!

இதய நோய்க்குரிய சூழலிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு தற்போது நீங்கள் உண்ணும் பழக்கத்தை மாற்றிக்கொள்வதால் மட்டுமே முடியும் என்கிறார்கள், ஆராய்ச்சியாளர்கள். உண்ணும் பழக்கம் என்றவுடன் வலது கையிலிருந்து இடக்கைக்கு மாற்றுவதல்ல; மாறாக நாம் அன்றாடம் உண்ணும் உணவில் விட்டமின் ஈ அதிக அளவில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது தான்.

இரண்டாயிரம் ஆண்கள் மற்றும் பெண்களை வைத்து ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் நடத்திய ஆராய்ச்சியில் 400 முதல் 600 யூனிட் விட்டமின் ஈ எடுத்துக்கொள்பவர்களுக்கு இதய நோயே வருவதில்லையாம். எனவே நாம் உண்ணும் உணவில் விட்டமின் ஈ சத்து அதிகமுள்ள சோளம், பார்லி, ஓட்ஸ், தவிடு நீக்காத கோதுமை, முளைவிட்ட தானியங்கள், நிலக்கடலை, கீரைகள், சூரிய காந்தி மற்றும் கடுகு எண்ணெய்கள் அதிக அளவில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேலும் விட்டமின் பி குரூப்பில் உள்ள போலிக் அமிலமானது இதய நோய் நம்மை அண்ட விடாத ஒரு பாதுகாவலனாய் விளங்குவது மறுக்க முடியாத உண்மை. போலிக் அமிலம் அதிகம் உள்ள உணவு வகைகள் : ஆரஞ்சு சாறு, முளைகட்டிய பருப்புகள், கீரைகள், பச்சைக் காய்கறிகளாகும்.

இதயத்தில் கொலஸ்ட்ரால் தேங்குவதால் இரத்த நாளங்கள் சுருக்கமடையும் அப்போது மாரடைப்பு போன்ற நோய்கள் வர வாய்ப்பு அதிகம். இதைத் தடுக்க அமிலச் சத்தான ஒமேகா-3 அதிகமுள்ள உணவு வகைகளை நம் அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வது மிக அவசியம். இந்த வகை அமிலச் சத்து மீன் உணவுகளில் அதிக அளவில் காணப்படுவதால் மீன் அதிகமாக சாப்பிடுபவர்களுக்கு இதய நோய் வருவதில்லை என்று வாஷிங்டன் நேனல் ஹெல்த் சென்டரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் சீமோ பவுலாஸ் கூறியுள்ளார்.

மீன் உணவை வெறுப்பவர்கள் சோயா, மொச்சை, வால்நட் பருப்பு வகைகள் பீன்ஸ், ஆலிவ் எண்ணெய் ஆகியவற்றை உணவில் அதிக அளவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதய நோய்கள் அபாயம் இன்றி வாழ தினமும் அரை கப் மாதுளம் பழச்சாறு அருந்த வேண்டும் என இஸ்ரேல் நாட்டில் உள்ள ராம்பம் மருத்துவ ஆராய்ச்சி மைய அறிஞர்கள் கூறியுள்ளனர். அதில் உள்ள பாலி பெனோல்ஸ் என்ற இதயத்திற்கு நன்மை செய்யும் ஆன்டி ஆக்ஸிடென்ட் அதிக அளவில் உள்ளதாக அவர்கள் மேலும் தெரிவிக்கிறார்கள். அனைத்திற்கும் மேலாக தினமும் தண்ணீர் அதிக அளவில் பருகி வந்தால் இதய நோயை இதயத்திலிருந்தே விரட்டி விடலாம். வருமுன் காப்போம், வாழ்வின் நலன் பேணுவோம்.

**– அ. மனோ ராயன், வீரபாண்டியன்பட்டணம்**



# கிச்சன் கார்னர்



## மாங்காய் பச்சடி

ஆய கலைகள் 64ல் சமையல் கலையும் உண்டு. எப்போதும் ஒரே வகையான சமையல் சமைத்து வந்தால் வீட்டில் உள்ளவர்களுக்கு போர் அடித்து விடும். ஹோட்டல் சாப்பாட்டைப் பற்றியே பெரிதாக பேசுவார்கள். ஆறு சுவைகளான இனிப்பு, காரம், துவர்ப்பு, புளிப்பு, கசப்பு. உவர்ப்பு இவைகளுக்குள் கூட்டணியை மாற்றி மாற்றி சில பதார்த்தங்களைச் செய்யத் தெரிந்தவர்கள் தான் சமையல் கலை நிபுணர்கள் என்பார்கள். இந்த மாதம் இனிப்பு, புளிப்பு, காரம் என்ற மூன்று சுவைகளை தேவையான அளவில் கலந்து படைக்கும் விருந்து தான் மாங்காய் பச்சடியாகும். இந்த பச்சடியானது சாம்பார் சாதம், தயிர் சாதத்திற்கு மட்டுமல்ல, இட்லி தோசை, பிரட் இவைகளோடு சேர்த்து சாப்பிட ஏதுவான ஒன்றாகும்.

**தேவையான பொருட்கள் :**

மாங்காய் – 1, மிளகாய்த்தூள் – அரை டீஸ்பூன்,
வறுத்து பொடித்த வெந்தயத் தூள் – அரை டீஸ்பூன், மஞ்சள் தூள்,
உப்பு தலா ஒரு சிட்டிகை (இரண்டு விரல்களால் அள்ளுவதே சிட்டிகையாகும்),
எண்ணெய் – 4 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் – 2, கடுகு – அரை டீஸ்பூன்,
அச்சுவெல்லம் – 4 துண்டுகள், கறிவேப்பிலை சிறிதளவு

**செய்முறை :** முதலில் மாங்காயை தோல்நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். பின்பு கடாயில் எண்ணெய் விட்டு சூடாக்கவும், அதில் காய்ந்த மிளகாயை கிள்ளிப்போட்டு கடுகு, கறிவேப்பிலை சேர்த்து தாளிக்கவும். அத்துடன் நறுக்கிவைத்துள்ள மாங்காய் துண்டுகளைப் போட்டு ஒன்றரை கப் தண்ணீர் விட்டு வேகவிடவேண்டும். மாங்காய் துண்டுகள் மசிய வெந்தவுடன் மிளகாய்த் தூள், வெந்தயத் தூள் சேர்த்து சிறிது நேரம் கிளறி அதன் பிறகு வெல்லத்தைப் போட்டு நன்கு கிளறி விடவும். கலவைகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து ஜாம் பதத்திற்கு வந்தவுடன் இறக்கி வைக்கவும். இதோ சுவையான மாங்காய் பச்சடி தயார்.



பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சாப்பாட்டுடன் இதைச் சேர்த்து கொடுத்தால் வழக்கத்தை விட அதிகம் சாப்பிடுவார்கள்.

– **S.மேரி லீலா,** பொற்பை

புனிதர்களின் பாதையில்...

# புனித செபமாலை அன்னை

மக்களும் துறவிகளும் பக்தியோடு உருக்கமாக மாதாவின் செபமாலையைச் செபித்ததன் பயனாக 7-10-1571ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்கள் துருக்கியரைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்கள். இதற்கு நன்றியாக வெற்றிகளின் அரசி என்னும் விழாக் கொண்டாடும்படி திருத்தந்தையவர்கள் கட்டளையிட்டார். 1716-ஆம் ஆண்டில் துருக்கியரோடு பயங்கரப் போர் நடந்தது. செபமாலை செபித்ததன் பயனாக அபூர்வ வெற்றி கிடைத்தது. இதைக் கண்ட திருத்தந்தை செபமாலை அன்னை விழாவை ஆண்டுதோறும் கொண்டாட கட்டளையிட்டார்.

**செபமாலையின் தன்மை :** ஆண்டவரது பிறப்பு, வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், தேவதாயின் வாழ்வு, இறப்பு, விண்ணேற்பு இவற்றைப் பற்றி சிந்திக்கிறோம். கபிரியேல் அதிதூதரும் எலிசபெத் அம்மாளும் புனித கன்னிமரியாளை நோக்கி கூறிய வாழ்த்து மொழிகளை வாயால் சொல்லுகிறோம்.

**நோக்கம் :** செபமாலையின் தேவ இரகசியங்களில் சில நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிந்திக்கும் நாம் இயேசுவையும் அவருடைய மாதாவையும் போல் வாழ முயல வேண்டும். செபமாலையானது நம்மை மரியாளுடன் ஒன்றிக்கிறது. அன்னை நமக்காக மன்றாடுவாள். மோட்சம் சேர்வோம் என்ற நம்பிக்கையும் நமக்கு அளிப்பாள்.

**சிந்தனை :** செபமாலையை தக்கவிதமாக செபிக்கிறவன் ஒருபோதும் சேதமடையமாட்டான். இதை நான் என் இரத்தத்தில் எழுதித் தர தயாராக இருக்கிறேன். (புனித லூயின் மோன்பர்ட்)

**செபம் :** திருச்செபமாலையின் இராக்கினியே, திருச்சபையையும் அகில உலகத்தையும் காப்பாற்றும்.

- **தூயவர்களின் வரலாறு**

## வேலை (பழ)மொழிகள்...

செய்யும் தொழிலே தெய்வம் – இந்தியா
சமையல்காரனை பஞ்சம் அண்டாது – சீனா
செய்வதை திருந்தச் செய்; இருமுறை செய்ய இடம் வைக்காதே – இங்கிலாந்து
பல காரியங்களை நினைக்கலாம்; ஒன்றையே செய்ய வேண்டும். – அமெரிக்கா
அதிகம் பேர் இருந்தால் குறைந்த வேலைதான் நடக்கும் – ஜெர்மனி

– **S. சித்ரா,** பொற்பை.

# டென்சிங்



சுமை தூக்கும் கூலியாக வாழ்க்கையைத் தொடங்கியவர், எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகண்டு உலகச் சாதனையொன்றை நிகழ்த்தினார். எவரெஸ்டை முதலில் சென்றடைந்தவர்கள் என்ற பெருமை எட்மண்ட் ஹிலாரிக்கும் இவருக்கும் கிடைத்தது. இச்சாதனை நிகழ்ந்தது 1953-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி. இமயமலைச் சிகரங்களில் ஏறவரும் அயல் நாட்டினருடன் மூட்டைகளைச் சுமந்து சென்று பல வருட அனுபவம் பெற்றவரான இவர், இதற்கு முன் ஆறு முறை எவரெஸ்டை அடையும் முயற்சியில் தோல்வி கண்டவர். மகாலுவில் பிறந்த இவருடைய வாழ்வில் மலைச் சிகரங்களும், பனிப் பாறைகளும், உறை பனிப்புயலும் வாழ்வோடு இணைந்த அம்சங்களாகவே இருந்தன. தோல்விகள் எல்லாம் வெற்றியடைய வேண்டும் என்ற அவரது வேகத்தை அதிகப் படுத்துவதாகவே இருந்தன. எவரெஸ்டை முதலில் சென்றடைந்தது யார் என்ற சர்ச்சை நெடுங்காலமாகவே இருந்து வந்தது. இருவரும் உச்சியை நெருங்கிவிட்டோம். ஹலாரி முதலில் காலடியெடுத்து வைத்தார். அடுத்து என் காலடி உச்சியில் பதிந்தது என்று கூறி சர்ச்சைக்கு முடிவு கட்டினார்.

நன்றி – **'புகழ்பெற்ற இந்தியர்கள்'**

## செப்டம்பர் மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1 புயற்காற்று 5 எருசலேம் 9 இறைவாக்கினர் 13 ஏதேன் 17 ஆபிரகாம் 21 நீதி 25 உயிர்

**வலமிருந்து இடம் :** 2 குளம்புகள் 6 சிலைகள் 10 நீதிமான் 14 எகிப்து 18 பாழிடம் 22 கனி

**மேலிருந்து கீழ் :** 3 சுருளேடு 7 இரக்கம் 11 மாகடலில் 15 தகில் 19 பாடகன் 23 கவலை

**கீழிலிருந்து மேல் :** 4 வைரக்கல் 8 இளவரசன் 12 இதயம் 16 விருப்பம் 20 காணாமல் 24 மூடுவேன்.

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

**1. D.ஜோஸ்பின் மேரிதாசன்**
கவரப்பேட்டை

**2. குயின்ரோஸ் பாக்கியம்**
பொற்பை

**3. M.டேவிட் லியோன்**
பொற்பை

**4. G. ரெஜினாள் மேரி**
பொற்பை

**5. J. சுதா ராஜா**
சென்னை – 41

**6. A. அமல பென்சி**
கொழுந்தட்டு

**7. A.V.J. பிரகாஷ்**
பொற்பை

**8. கபிரியேல் மேரி**
பொற்பை

**9. S. மேரி லீலா**
பொற்பை

**10. J. ஜேசுதுரை ஜென்சி**
கவரப்பேட்டை

**11. A. மெர்லின்**
அடைக்கலாபுரம்

**12. J. ஏசுவடியான் சுமதி**
கவரப்பேட்டை

**13. S. ஜோஸ் பிரகாஷ்**
அய்யம்பாளையம்

**14. J. சிலேஸ்டர்**
ஈரோடு

**15. M.லைசா பாய்**
இலந்தைவிளை

# சூப்பர் டிப்ஸ்...

- நமது இரத்தத்தில் இருப்பது போல் சரியான அளவில் மின் பகுனி உப்புக்கள் இளநீரில் இருப்பதால் இளநீர் இயற்கை தந்த நல்லதொரு டானிக். சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் இளநீரை ஒரு உயிர்த்திரவம் என்று சொல்லலாம்.

- சுக்கு பெருங்காயம் சமஅளவில் எடுத்து பால்விட்டு அரைத்து மூட்டு வீக்கத்திற்கு தடவி வர மூட்டு வீக்கம் குணமாகும்.

- மாதுளம் பழத்தோலை சூரிய ஒளியில் காய வைத்து அரைத்து அதோடு தயிர் சேர்த்து அருந்த வயிற்றுக்கடுப்பு குணமாகும்.

- ஏழெட்டு மிளகுடன் சில துளசி இலைகளைச் சேர்த்து மென்று தின்றால் ஒற்றைத் தலைவலி மறைந்துவிடும்.

- சிறுவர்களுக்கு தேனுடன் கலந்த துளசிச் சாறு கொடுத்து வந்தால் எந்த மருந்துக்கும் குணமாகாத இருமல் மறைந்து போகும்.

- எலுமிச்சம்பழத் துண்டு ஒன்றை எடுத்து நெற்றிப் பொட்டில் லேசாக தேய்த்தால் தலைவலி குணமாகும்.


- அலுமினியப்பாத்திரங்களை உபயோகித்த உடனே நன்கு கழுவி துடைத்து வைக்காவிட்டால் கறைபடிந்து பார்ப்பதற்கே அசிங்கமாக இருக்கும்.


- டிகாஷன் போட்டு இறக்கிய பின்னர் மீதமிருக்கும் டிகாஷன் பொடியைக் கொண்டு எவர்சில்வர் பாத்திரங்களைக் கழுவினால் பளபளவென பாத்திரங்கள் மின்னுவதைப் பார்க்கலாம்.

- பித்த வெடிப்பு அடியோடு அகல, விளக்கெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணையில் மஞ்சள் தூளை குழைத்து ஒரு வாரம் தொடர்ந்து இரவில் படுக்கப் போகும போது போட்டு வாருங்கள். விரைவில் பலன் காண்பீர்கள்.

–கவிஞர். **வி.ஜி.ஏ.ஆல்பர்ட்,** மதுரை.

**18ம் பக்க புதிர் விடைகள் :**



# ரோஜா மலர்!
# குழந்தை திரேஸ்!!



பிரான்சு நாட்டில் உள்ள அலன்ஸோன் என்ற சிறிய கிராமத்தில் மிகவும் தெய்வ பக்தியுள்ள ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தில் ஒன்பதாவது குழந்தையாக மலர்ந்தது தான் இந்த குழந்தை திரேசம்மாள். சிறு வயதிலேயே தாழ்ச்சியின் இருப்பிடமாக விளங்கிய திரேஸ் த்ன்னையே பலிப்பொருளாக ஓர் சிறிய அறைக்குள் இருந்து இறையன்பு, இறைநம்பிக்கை ஆகிய நற்பண்புகளை பேணிக்காத்து, கடவுளுக்கு சித்தமான அன்னையாக விளங்கினார் என்று வரலாறு கூறுகின்றது.

இப்படிப்பட்ட நற்பண்புகள் இருந்தால் மட்டுமே விண்ணகம் சேர்வதற்குரிய நேரிய வழிகளைக் காணமுடியும் என்று கூறியுள்ளார். வழி தவறிய ஆடுகளைப் போல் இருக்கின்ற, கிறிஸ்துவை அறியாத ஆன்மாக்களை மீட்டெடுப்பதற்கென்றே தனது சிறுவயதிலேயே அவர் கார்மெல் மாதா சபையில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இறைப் பணிக்கென்று தங்களை அர்ப்பணித்த குருக்களுக்காகவும், இறைப் பணியாளர்களுக்காகவும் ஜெபிப்பதே அவரது முக்கிய நோக்கமாக இருந்தது.

பூவுக்குள் பூகம்பமாய் இந்த சிறிய குழந்தை திரேஸ் என்கின்ற சிறிய புஷ்பத்திற்கு ஏற்பட்ட கொடிய எலும்புருக்கி நோயானது, அவரை அவரது 24 வயதிலேயே இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்ள வைத்தது. தாம் இறைவனடி சேருவதற்கு முன்பே அவர் கூறியது நான் விண்ணுலகம் சென்று பூவுலகின் மீது ரோஜா மலர்களைப் பூமாரிப் பொழிவேன். ஏராளமான புதுமைகளை பூவுலக மக்களுக்கு இறைவனிடம் பெற்று வழங்குவேன் எனக் கூறியுள்ளார்.

அதன் ஞாபகமாகவே குழந்தை திரேசாள் திருநாட்களில் ஒவ்வொரு ஆலயத்திலும் ரோஜா மலர்கள் அளிக்கப்படுகிறது. நமது ஞான தந்தையாம் புனித சவேரியார் பூவுலகில் அவர் வாழ்ந்த காலங்களில் எத்தனை ஆத்துமாக்களை இறைவன் பக்கம் திருப்பினாரோ, வழி தவறிய ஆடுகளை இறை மந்தையில் சேர்த்துவிட எவ்வளவு ஊழியம் செய்திருப்பாரோ அதே அளவில் குழந்தை திரேசம்மாளும் இறைஊழியம் செய்துள்ளார்கள்.

குழந்தை திரேசம்மாள் தம் ஜெப, தவ சொத்துக்களால் இறைவனை மன்றாடி நமக்காக பெற்றுத் தந்த நன்மைகளுக்காக இந்நாள் வரை நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் நாம் அன்னை தெரசாவை மகிமைப் படுத்தி வருகின்றோம்.

பெண் புனிதர்களில் மூன்றாவதாக இடம் பெறும் குழந்தை திரேசம்மாளை வேத போதக நாடுகளின் பாதுகாவலி என்று இன்றும் அழைக்கப்படுகிறாா்.

–பட்டணம் **T.பபிலாஸ்.**

# தூத்துக்குடி மாவட்டத்திற்கு
## வெள்ளி விழா – 20.10.2012




- 20.10.1986 அன்று தூத்துக்குடி தனி மாவட்டமாக உதயமாகியது. அதன் முதற்பெயர் வ.உ. சிதம்பரனார் மாவட்டம்.
- தேசிய கவி சுப்பிரமணி பாரதி ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதற் குரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி ஆகிய உன்னத தலைவர்களைத் தந்தது இந்த மாவட்டம்.
- மிகப்பெரிய வரலாற்று பின்னணிகளையும் கலாச்சார பாரம்பரியங்களையும் கொண்டது தூத்துக்குடி மாவட்டம்.
- மேற்கே நெல்லை மாவட்டம், வடக்கே விருதுநகர் மாவட்டம், கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் வங்காள விரிகுடாவையும் எல்கைகளாகக் கொண்டது.
- மாவட்டத்தின் முக்கியமான தொழில்கள் விவசாயம், உப்புக் காய்ச்சுதல், பனைத்தொழில், மீன்பிடித் தொழில்.
- மாவட்டத்தின் நீர் ஆதாரமாக தாமிரபரணி ஆறு விளங்குகிறது.
- மாவட்டத்தில் 163 .5 கி .மீ தூரம் நீண்ட கடற்கரை அமைந்துள்ளது. 90 மீனவ கிராமங்கள் உள்ளன. இதில் சுமார் 30000பேர் மீன்பிடித் தொழில் செய்து வருகிறார்கள்.
- தூத்துக்குடி கடற்பகுதியில் வான்தீவு, காசுவாரி தீவு, காரைச்சல்லி தீவு, விலாங்கு சல்லி தீவு, உப்புத் தண்ணி தீவு, புலுவிண்ணி தீவு, நல்ல தண்ணி தீவு ஆகிய 7 தீவுகள் அமைந்துள்ளன.
- உப்பு உற்பத்தியில் தூத்துக்குடி தனி முத்திரை பதித்து வருகிறது. சுமார் 25000 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்திசெய்யப்பட்டு வருகிறது.
- மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் தீப்பெட்டித் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.
- தூத்துக்குடியில் முத்துக்குளித்தல் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தது.
- முத்து நகரின் வளர்ச்சிக்கு வ.உ. சிதம்பரனார் துறைமுகம் முக்கிய பங்கு வகிக்கிறது.
- தூத்துக்குடி நகருக்கு திருமந்திரநகர் என்றும், முத்துநகர் என்றும் சிறப்புப் பெயர்கள் உண்டு.
- ஏரல் அருகே உள்ள கொற்கை கிராமம் முன்னொரு காலத்தில் தமிழகத்தின் மிக முக்கிய துறைமுகமாக விளங்கியுள்ளது.
- சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் கொற்கையிலிருந்து பல்வேறு மேற்கத்திய நாடுகளுடன் கடல் வாணிபம் நடைபெற்றிருந்தது.
- **திருமண வரம் தரும் திருக்கல்யாண மாதா திருத்தலம் இந்த மாவட்டத்தில் உள்ள பொத்தக் காலன்விளையில் தான் அமைந்துள்ளது.**

– **ஜெயக்கொடி,** 12– சி, பொற்பை

# வாழ்த்துகிறோம்

| எண் | மண நாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| 1. | 20.8.2012 | மரிய சுமன்<br>சகாய ரெக்ஸிலின் | பொற்பை |
| 2. | 12.09.2012 | ஜஸ்டின் ஜெயராஜ்<br>அன்பு ஐந்தரசி | பொற்பை |

## கறுப்பு என்றாலே வெறுக்கும் அன்பர்களுக்கு...

கறுப்பை நேசித்து விரும்பிய காலமும் வரலாற்றில் உண்டு. கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதற்காகவே அந்தோவா என்னும் போர்ச்சுக்கீசிய குருவானவர் 1616-ல் தமிழகத்தின் கண்டலூர் பகுதிக்கு வந்தார். தமிழக மக்களுடன் பழகிய அவர், ரோமில் உள்ள கோஸ்வின் நிக்கல் அடிகளாருக்கு ஒரு கடிதம் எழுதினார். "நான் தமிழக மக்களிடம் மதத்தைப் பரப்ப வந்தவன். ஆனால் தமிழர்கள் என்னிடம் எந்த வேறுபாடும் பார்க்காமல் பழகினர். தமிழர்களின் உணவு, உடை, பழக்கம் என்று எல்லாவற்றுடன் ஒன்றிவிட்டேன். ஆனால், இந்தச் சிவப்பு நிறம்தான் என்னை வேறுபடுத்திக் காட்டுகிறது. தயவு செய்து என் நிறத்தைக் கறுப்பாக மாற்றும் களிம்பைக் கண்டுபிடித்து அனுப்புங்கள். நான் தமிழர்களில் ஒருவனாகவே இருக்க ஆசைப்படுகிறேன்." என்று கடிதம் எழுதி இருக்கிறார். கறுப்பு நிறத்தைச் சிவப்பாக மாற்றிக்கொள்ள சந்தையில் கிடைக்கும் ஃபேஸ் க்ரீம் களுக்காக நேரத்தையும் பணத்தையும் செலவு செய்து கொண்டு இருப்பவர் களுக்கு இனியாவது நிறம் பற்றிய புரிதல் கிடைக்குமா?

–**எஸ். சூடாமணி**, திருச்சி

**கேட் வே ஆப் இந்தியா :**

மும்பை காம்தேவி பகுதியில் பழைய கட்டடங்கள் நிறைந்த இடத்தில் கேட்வே ஆப் இந்தியாவின் ஒரிஜினல் மினியேச்சர் இருப்பதை இன்றும் காணலாம். அதை அங்கு அமைத்தவர் ராவ்பகதூர் யஷ்வந்தராவ் தேசாய். இவர் பொதுப்பணித்துறையில் கிரேடு ஒன் ஓவர்சியராக கன்சல்டிங் ஆர்கிடெக்காகப் பணியாற்றியபோது, அவரது மேற்பார்வையில்தான் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மியூசியம், ஜெனரல் போஸ்ட் ஆபீஸ், ஓல்டு கஸ்டம்ஸ் ஹவுஸ், ராயல் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ், கேட்வே ஆப் இந்தியா ஆகியவை உருவாகின.

இவை அனைத்திலும் கேட்வே ஆப் இந்தியா இவருக்கு தனி கவுரவத்தையும், பெருமையையும் தேடித் தந்தது. 1924ம் ஆண்டு வைஸ்ராய் லார்டு ரீடிங் என்பவரால் திறந்து வைக்கப்பட்ட இந்த கேட்வே ஆப் இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேசாய் என்ற ஓர் இந்தியரின் மேற்பார்வையில் உருவானது நம் அனைவருக்கும் பெருமையே.

–நன்றி : **நம்வாழ்வு**

## இதய அஞ்சலி

மிக்கேல்ராஜ் பொற்பை 31.08.2012

# அன்னையின் அணிகலன்கள்



## புகழ் மாலை (மன்றாட்டு மாலை) தோன்றிய விதம்

நாம் தற்போது பயன்படுத்தும் மரியாவின் புகழ் மாலை 1587-ம் ஆண்டு திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துவால் திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் மரியாவின் புகழ்மாலை தோற்றம் மற்றும் அதன் தொடர்வளர்ச்சிக்கான எந்தவொரு எழுத்துபூர்வமான ஆதாரமும் இல்லை என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் சில வரலாற்றறிஞர்கள் புகழ் மாலையின் தோற்றம் 687-ம் ஆண்டுகளில் வாழ்ந்த திருத்தந்தை முதலாம் செர்ஜியூஸ் காலத்தில் தொடங்கியிருக்கலாம் என்கின்றனர். மற்றும் சிலர் புனித பெரிய கிரகோரியார் காலம் என்றும் சிலர் ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுகின்றனர். ஆனால் சிலர் அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்திலேயே புகழ்மாலை பழக்கத்தில் இருந்திருக்கலாம் என்கின்றனர். ஆனால் வரலாற்று அறிஞர்களின் சீரிய தேடலால் புகழ் மாலையின் தோற்றம் 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே காணப்பட்டுள்ளதாக நிரூபணம் ஆகியுள்ளது. ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட டிலிங்ஜன் என்ற புகழ் மாலை தான் மிகவும் பழமையான, அச்சிடப்பட்ட புகழ் மாலையாகும். இதை வெளியிட்டவர் முத்திபேறுபெற்ற கனிசியூஸ் என்று கணிக்கப்படுகிறது.

15-ம் நூற்றாண்டின் இறுதியில் காணப்பட்ட பல புகழ்மாலைகளை மூலதனமாகக் கொண்டு இயற்றப்பட்ட பொதுவான புகழ்மாலை தான் லொரேட்டாவின் புகழ்மாலை. பின்னர் 16-ம் நூற்றாண்டில், லொரேட்டாவின் புனிதத் தலத்துக்கு வந்து சென்ற பக்தர்களிடையே இந்தப் புகழ்மாலை மிகுந்த வரவேற்பை பெற்றது. பின்னர் கிறிஸ்டென்டோம் நகரைச் சுற்றியுள்ள நாடுகளிலும் இது மிகுந்த செல்வாக்கு பெற்றது. இறுதியில் திருச்சபையின் அங்கீகாரத்தையும் பெற்றது.(1587) மிகவும் பழமையான இந்தப் புகழ்மாலை பக்தியின்வெளிப்பாடு என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 59 புகழ்ச்சி சொற்கோவைகளை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. ஆனால் அவைகளின் தோற்றம் மன்றாட்டு மாலை போல் அல்லாமல், புனித இல்தேபோன்ஸ் அவர்களின் முதல் மற்றும் மூன்றாவது மறையுரைகளிலிருந்து தேர்ந்து எழுதப்பட்ட சொற்கள் தான் என்று சௌரென் என்ற அறிஞர் கூறுகிறார். இவ்வாறு 12-ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட புகழ்மாலை மிகவும் நீளமாக இருந்ததால் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெறவில்லை.

புகழ்மாலை உருவாக்கத்திற்கான காரணம் :

புகழ்மாலையின் அமைப்பு மற்றும் பொருளில் இருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. அதாவது தனிமனித பக்தி முயற்சியை உற்சாகப்படுத்தவே இந்த மரியின் புகழ்மாலை இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று அறியப்படுகிறது. இயற்கைச் சீற்றம் மற்றும் உயிர்க்கொல்லி நோய்களால் மக்கள் அவதிப்படும்போது புனிதர்களுக்கான மன்றாட்டு மாலை பாடுவதை திருச்சபை வழக்கமாகக் கொண்டிருந்தது. உதாரணமாக 15-ம் நூற்றாண்டில் மக்கள்உயிர்க்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்டபோது மரியின் புகழ்மாலை பாடப்பட்டது. 1920-ம் ஆண்டு தங்களின் குடியாட்சி முடிவுக்கு வரும்வரை புகழ்மாலை பாடுவது ஒருபாரம்பரியசெயல் என்று கூறி அதையேசெய்துவந்தனர்.

நன்றி : - **தாயே எங்கள் தஞ்சமே.**

சிறுகதை:

# வேதமே வெளிச்சம்

பில்லி தன் கையிலிருந்த கதைப் புத்தகத்தை கவனமாக படித்துக் கொண்டிருந்தான். அவன் அருகில் பலவகையான காமிக்ஸ் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு புத்தகத்தையும் ஆசையோடும், விறுவிறுப்போடும் படித்துக்கொண்டிருந்தான். எல்லாமே அவன் பள்ளித் தோழர்களிடமிருந்து கொண்டு வந்த புத்தகங்கள். அவன் வீட்டிலும் ஒரு புத்தக அலமாரி உண்டு. அதில் விவிலியம், ஆவிக்குரிய நூல்கள், புனிதர்கள் பற்றிய நூல்கள் எல்லாம் உண்டு. ஆனாலும் அதில் அவன் நாட்டம் கொள்ளாமல் காமிக்ஸ் படிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தான். ஞாயிற்றுக்கிழமை மட்டும் கோவிலுக்குப் போகும்போது ஒப்புக்கு விவிலியத்தை தூக்கிக் கொண்டுபோவான்.

இவனது நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்த அவனது அம்மா ஒரு நாள் அவனிடம், “டேய் பில்லி, நீ எப்ப பாத்தாலும் காமிக்ஸ் புக்கையே படிச்சிட்டு இருக்கியே, நம்ம எல்லாரையும் படைச்ச இயேசப்பாவோட விவிலிய புத்தகத்தை மட்டும் ஒதுக்கி வைக்கிறியே... இனிமே நீ இந்த காமிக்ஸ் புத்தகத்தை எல்லாம் குறைச்சிட்டு, விவிலியம் படிப்பதில் அதிக கவனம் செலுத்தணும்...சொல்லிட்டேன்” என்று கண்டிப்பான குரலில் கறாராக சொன்னாள்.

நண்பர்களிடம் ஆசையாய் வாங்கி வந்த கதைப்புத்தகத்தை நிம்மதியாக படிக்க விடாமல் தொந்தரவு செய்கிறார்களே என்ற எரிச்சலில் கோபமான பில்லி, “என்னம்மா நீங்க.... நான்தான் ஞாயிற்றுக்கிழமையில் மறைக்கல்வி வகுப்பில் விவிலியத்தை தானே படிக்கிறேன். வேணுமின்னா ஒன்னு செய்யலாம் வாரத்தில் ஒரு நாள் முழுதும் நான் விவிலியத்தையும், ஆவிக்குரிய புத்தகங்களையும் படிக்கிறேன்... மற்ற நாட்களில் எனக்கு விருப்பமான பத்தகத்தை படிக்க நீங்க அனுமதிக்கனும்... என்ன?” என்று அம்மாவின் கண்டிப்புக்கு பதிலடி கொடுத்தான்.

இதை எதிர்பார்க்காத அவனது அம்மா, சுதாகரித்துக் கொண்டு, “அப்படியா சரி... அப்படியே செய் ஆனா ஒன்னு நானும் இந்த வாரம் முழுவதற்குமான சமையல் எல்லாத்தையும் இன்றைக்கே செய்து வைத்துவிடுகிறேன். மற்ற நாட்களில் எனக்கு விருப்பமான வேலைகளை மட்டும் நான் செய்துகொள்கிறேன்” என்றாள். அதற்கு பில்லி உடனே, ஏம்மா நீங்க சமைக்கிறதை அடுத்த நாள் வைத்திருந்து சாப்பிடவே முடியாது இந்த லட்சணத்துல ஏழு நாள் வைத்திருந்து சாப்பிட முடியுமாம்மா, என்னம்மா நீங்க புரியாம பேசறீங்க... என்றான்.

இவர்கள் உரையாடல்களை சேரில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த பில்லியின் அப்பா, “டேய் பில்லி உனக்கு சாப்பாடு மட்டும் டெய்லி புதுசா வேணும், ஆனா இயேசப்பா நமக்கு தந்த வார்த்தை என்னும் உணவு மட்டும் ஒரு வாரத்திற்கு மொத்தமா வேணும் என்னடா நியாயம் இது, மகனே நாமெல்லாம் ஜெபத்தில் என்ன வேண்டிக்கிறோம், எங்கள்அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்... என்று தானே ஜெபிக்கிறோம்.

நாமெல்லாம் அன்றாடம் உண்ணுகிற சாப்பாடானாலும், இறைவார்த்தை என்ற உணவானாலும் நாம் அன்றாடம் சாப்பிட வேண்டும் என்பது தானே உலக நீதியாயிருக்கிறது. அன்றன்றைக்குள்ள சாப்பாட்டை அன்றன்றைக்கு தாயரித்து உண்பது போல, இறைவசனங்களையும் அன்றாடம் வாசித்து ஜெபிப்பது தானே நியாயம் இல்லையா” என்று மென்மையான குரலில் அவனுக்கு விளக்கம் கொடுத்தார்.

அருகில் நின்று கொண்டிருந்த அவனது அக்கா எப்சி, "டேய் தம்பி நாம் அன்றாட படிப்பிற்கும், வேலை செய்வதற்கும் தேவையான சக்தியை அன்றாட உணவிலிருந்து பெறுவது போல நமக்கு அன்றைய நாளில் ஏற்படும் தடங்கல்களுக்கும், சாத்தானின் சோதனைகளுக்கும் நம்மை விலக்கிக் காப்பது நம் தேவனின் வார்த்தைகள் தான் என்பதை மறந்துவிடாதேடா" என்று எக்ஸ்ட்ரா விளக்கம் கொடுத்தாள்.

இதில் தெளிவடைந்த பில்லி, ''அம்மா சாரிம்மா, இப்ப நான் புரிஞ்சிட்டேம்மா.. இனிமே தினமும் காலை, மாலை, இரவு என மூன்று வேளையும் பாட நேரம்தவிர விவிலியம் மட்டும் தான் படிப்பேன்" என்று கனிவான குரலில் சொன்னான். காலை நேர வெயில் வீட்டின் உள்ளே பிரகாசமான வெளிச்சத்தை தந்து கொண்டிருந்ததைப் போல எல்லோருடைய முகத்திலும் சொல்லமுடியாத பிரகாசம் உதித்துக் கொண்டிருந்தது.

**கருத்து :** அநேக நேரங்களில் இல்லை... இல்லை... எல்லா நேரங்களிலும் வசனங்களின் மூலமாகவே தேவன் நம்மோடு பேசுவார். எனவே தினமும் விவிலியத்தை நாமும் வாசித்து நமது பிள்ளைகளையும் சிறு வயதிலிருந்தே தெய்வ பக்தியில் வளர்க்கவேண்டும். விவிலியத்திலே விலைமதிக்கமுடியாத பல முத்துக்கள் உண்டு. அந்த முத்துக்களில் ஒரு முத்தாக நமது பிள்ளைகளும் மாற நாம் ஜெபிப்போம்! குழந்தைகளை ஜெபிக்கவைப்போம்.

–**M.மரிய எப்சி,** பொற்பை

## உங்களுக்குத் தெரியுமா?

டால்பின் மூக்கு என அழைக்கப்படும் துறைமுகம் எது? – விசாகப்பட்டினம்

இந்தியாவின் மிகப்பெரிய துறைமுகம்... – மும்பை

இந்தியாவின் ஆற்றுத் துறைமுகம் உள்ள இடம்? – கொல்கத்தா

இந்தியாவின் மிகப் பழமையான துறைமுகம்... – சென்னை துறைமுகம்

– **டே. ரீகன்,** பொற்பை.

## சான்றோர் வாக்கு..!

மக்கள் உடலுக்கு உணவு எத்தகையதோ அத்தகையது மக்கள் அறிவிற்கு கல்வி – **திரு.வி.க**


படிக்கும்போது சோர்வை உண்டாக்காத எந்த நூலும் நல்ல நூலே.– **வால்டேர்**

கஷ்டங்கள் அடைந்த பின்புதான் மனிதன் அடக்கத்தையும் அறிவையும் பெறுகிறான்– **பெஞ்சமின் பிராங்க்ளின்**

கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும். – **தந்தை பெரியார்**

– **S. ஜெனிபர்,** பொற்பை.

# மாவட்ட அளவில் சாதனை



தூத்துக்குடி கல்வி மாவட்ட அளவிலான குடியரசு தினவிழா மற்றும் பாரதியார் தின விழா விளையாட்டுப் போட்டிகள், மெஞ்ஞானபுரம் அம்புரோஸ் மேல்நிலைப் பள்ளியில் வைத்து 10-09-2012 அன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நமது ஊர் **புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி** மாணவ, மாணவிகள் குழுப் போட்டியிலும் தனிநபர் தடகளப் போட்டிகளிலும் வெற்றி பெற்று பள்ளிக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்தனர்.

தடகளப் போட்டிகளில் ஜுனியர் மாணவியர் பிரிவில் மாணவி **S. மெனுஷியா** 600 மீட்டர் ஓட்டப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். சீனியர் பிரிவில் மாணவி **S.மோகனா அம்பிகை** மும்முறை குதித்து தாண்டும் போட்டியில் முதல் பரிசும்,100 மீட்டர் ஓட்டப்போட்டியில் இரண்டாம் பரிசும், 200 மீட்டர் ஓட்டப் போட்டியில் 3ம் பரிசையும் பெற்றார். அதே பிரிவில் மாணவி **S.லிடியா பபிக்** 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் முதல் பரிசும், 800மீட்டர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றார். அதே பிரிவில் தடைதாண்டி ஓடும் போட்டியில் மாணவி **J.ஜெனிபர் திவ்யா** முதல் பரிசும் பெற்றார்.



மாணவர்களுக்கான தடகளப் போட்டிகளில் சீனியர் பிரிவில் உயரம் தாண்டும் போட்டியில் மாணவன் **K.ராஜேஷ்** முதல் பரிசு பெற்றார். அதே பிரிவில் 200மீட்டர் ஓட்டப் போட்டியில் மாணவன் **A.அருள் விஜய்** மூன்றாம் பரிசையும் பெற்றார்.

மாணவர்களுக்கான குழு விளையாட்டுப் போட்டிகளில் சீனியர் பிரிவு கைப்பந்து போட்டியில் மாணவர்களின் அணி இரண்டாம் பரிசைப் பெற்றது. வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களை தாளாளர் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** திருத்தொண்டர் **பபிஸ்டன்,** தலைமை ஆசிரியை திருமதி **S.மார்க்ரெட்** மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாராட்டினார்கள். வெற்றி பெற்ற அனைவரும் எதிர்வரும் தூத்துக்குடி-திருநெல்வேலி மாவட்டங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள். அனைவரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



– **A.நெல்சன் சத்தியராஜ்,**
உடற்கல்வி ஆசிரியர்.

# வாழ்வு தரும் வார்த்தைகள் – அக்டோபர் – 2012

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித குழந்தை இயேசு தெரசம்மாள் | எசா. 66:10-14 | மத். 18:1-5 |
| 2. | புனித காவல் தூதர்கள் | விப. 23:20-23 | மத். 18:1-5,10 |
| 3. | | யோபு 9:1-12,14-16 | லூக். 9:57-62 |
| 4. | புனித பிரான்சிஸ் அசிசியார் | கலா.6:14-18 | மத். 11:25-30 |
| 5. | | யோபு.38:1,12-21,40:3-4 | லூக். 10:13-16 |
| 6. | புனித புரூனா | பிலி.3:8-14, | லூக்.9:57-62 |
| 7. | பொதுக்காலம் ஞாயிறு -27 | தொ.நூ 2:18-24<br>எபி. 2:9-11 | மாற். 10:2-16 |
| 8. | | கலா. 1:6-12 | லூக். 10:25-37 |
| 9. | புனித தியோனிசியு தோழர்கள் | 2கொரி.6:4-10 | மத். 5:13-16 |
| 10. | | கலா 2:1-2,7-14 | லூக். 11:1-4 |
| 11. | | கலா 3:1-5 | லூக். 11:5-13 |
| 12. | | கலா. 3:7-14 | லூக். 11:15-26 |
| 13. | | கலா. 3:22-29 | லூக். 11:27-28 |
| 14. | பொதுக்காலம் ஞாயிறு -28 | சா.ஞா7:7-11 எபி 4:12-13 | மாற். 10:17-30 |
| 15. | புனித அவிலா தெரசா | உரோ. 8:22-27 | யோவா. 15:1-8 |
| 16. | புனித எட்விஜ் | சீ.ஞா 26:1-4,13-16 | மாற். 3:31-35 |
| 17. | புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் | பிலி. 3:17-4:1 | யோவா.12:24-26 |
| 18. | புனித லூக்கா | 2திமொ. 4:9-17 | லூக். 10:1-9 |
| 19. | புனித சிலுவை சின்னப்பர் | 1கொரி 1:18-25 | மத். 16:24-27 |
| 20. | | எபே. 1:15-23 | லூக். 12:8-12 |
| 21 | பொதுக்காலம் ஞாயிறு - 29 | எசா.53:10-11 எபி.4:14-16 | மாற்.12:13-21 |
| 22 | அருளாளர் 2ம் ஜான்பால் | எபே. 2:1-10 | லூக்.12:35-38 |
| 23 | புனித ஜான் கப்பிஸ்திரான் | எபே. 2:12-22 | லூக். 12:13-21 |
| 24 | புனித அந்தோணி கிளாரெட் | எசா. 52:7-10 | மாற். 1:14-20 |
| 25 | | எபே. 3:14-21 | லூக். 12:49-53 |
| 26 | | எபே.4:1-6 | லூக். 12:54-59 |
| 27 | | எபே. 4:7-16 | லூக். 13:1-9 |
| 28 | பொதுக்காலம் ஞாயிறு -30 | எரே.31:7-9 எபி.5:1-6 | மாற். 10:46-52 |
| 29 | | எபே. 4:32-5:8 | லூக். 13:10-17 |
| 30 | | எபே. 5:21-33 | லூக். 13:18-21 |
| 31 | | எபே. 6:1-9 | லூக். 13:22-30 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | | | 6 |
| | 21 | | | | | | | | 2 |
| | 9 | | | | | | ■ | | 25 |
| 12 | | | | | | | 11 14 | | |
| 3 13 | | | | | | 18 | | | |
| | 15 | 19 | 23 | | | | | 8 | |
| | | | | 16 | 24 | | | 7 | |
| | | | | | 22 | 20 | | | |
| | | 17 | | | | | | | |
| 5 | | | | | | | 10 | | 4 |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி
இறைவாக்கினர் **தானியேல்** புத்தகம்
அதிகாரம் 1 முதல்
அதிகாரம் 12 வரை

விடைகள் வந்து சேரவேண்டிய
கடைசிநாள் : 15.10.2012

## இடமிருந்து வலம்

1. அரண்மனை அலுவலரின் தலைவன் யார்?
5. கல் ஒன்று பெயர்ந்து .................. வந்தது.
9. நான்காவது ஆள் யாரைப் போல தோன்றினான்?
13. உன்னதரின் புனிதர்கள் என்ன பெறுவர்?
17. உனக்கு ............................ உண்டாவதாக.
21. அவனுடைய .................. முறியடிக்கப்படும்.

## வலமிருந்து இடம்

2. தானியேலுக்கு இடப்பட்ட மறுபெயர் என்ன?
6. நெபுகத்னேசர் சமவெளியில் எதை நிறுத்திவைத்தான்?
10. மரத்தில் எவை மிகுதியாய் இருந்தன?
14. திக்ரீசு என்னும் .................. கரையில் நின்றுகொண்டிருந்தேன்.
18. .................... நூலில் எழுதியுள்ளதை உனக்கு தெரிவிப்பேன்.
22. ....................................... சிலர் கொல்லப்படுவர்.

## மேலிருந்து கீழ்

3. அரசருடைய காவல் தலைவன் யார்?
7. நாங்கள் உமக்கு ....................... கூறத் தேவையில்லை.
11. நெபுகத்நேசரின் மகன் யார்?
15. துணை செய்ய வந்த தலைமைக் காவலர் யார்?
19. தென் திசை மன்னனின்.................... வட திசை மன்னனிடம் வந்து சேர்வான்.
23. இந்த ....................................... முத்திரையிட்டு வை.
25. சிலர் முடிவில்லா ..............................பெறுவர்

## கீழிருந்து மேல்

4. சிலையின் தலை எந்த உலோகத்தால் ஆனது?
8. அவனது முகம் ..........................சிவந்தது.
12. அறுபத்தி இரண்டாம் வயதில் அரசனானவன் யார்?
16. நான் ................. இழந்துவிட்டேன்.
20. அவன் முழு .................. அடையமாட்டான்.
24. நீயோ தொடர்ந்து வாழ்வை........................

# திருத்தல வழிபாடுகள்

= ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடுஅதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6-00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.

= மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.

= மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.

= மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.

= மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.

= மற்ற நாட்களில் காலை 6-00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

= மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## இணையூர் வழிபாடுகள்

**கொழுந்தட்டு**

= வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

**நவமுதலூர்**

= வாரத்திற்கு ஒருமுறை திருப்பலி நடைபெறுகிறது.

**வாலத்தூர்**


= மாதத்திற்கு ஒருமுறை திருப்பலியும் தேவைக்கேற்ப மற்ற நாட்களில் திருப்பலியும் நடைபெறுகிறது.

## அடுத்த இதழ்

அனைத்து புனிதர்கள், அனைத்து ஆன்மாக்கள், கிறிஸ்து அரசர், குழந்தைகள் தினம் நேரு பிறந்த நாள், ஆகிய கருத்துக்களை தாங்கி வரவிருக்கிறது. இவைகளைப் பற்றிய கருத்துக்கள் கட்டுரைகள் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-10-2012**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !



solomon Graphics, Tsy. 9788675143